# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

S.C. No.75/2024

P.W.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கணேசன் |
| தந்தை பெயர் | : | சிக்கன் கவுண்டர் |
| கிராமம் | : | 3/418, தோட்டமுடையான்பட்டி, பவித்திரம் அஞ்சல், |
| வட்டம் | : | சேந்தமங்கலம் வட்டம் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 54 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 11.12.2024.

எதிரிகள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தோட்டமுடையான்பட்டி கிராமத்தில் எனக்கும், எனது அண்ணனா ஆஜர் முதலாவது எதிரி சுப்ரமணிக்கும் சொந்தமாக தலா 1.50 ஏக்கர் விவசாய நிலம் இருக்கிறது. இருவரும் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறோம். மேற்சொன்ன எனக்கு பாத்தியப்பட்ட 1.50 ஏக்கர் நிலத்திற்குள் மூன்று சென்ட் அளவுள்ள கிணறு ஒன்று ஞானசேகர் என்பவருக்கும், எனக்கும் பாத்தியப்பட்டு இருந்தது. சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு அந்த கிணறை மூடிவிட்டோம். எனது வீட்டிற்கு முன்பு எனக்கும், எனது அண்ணனுக்கும் சொந்தமாக ஆறு சென்ட் (தலா 3 சென்ட்) நிலம் உள்ளது. கிணறை மூடிய 3 சென்டை எனது அண்ணனுக்கு கொடுப்பதாகவும், வீட்டிற்கு முன்புள்ள அவருக்கு பாத்தியப்பட்ட 3 சென்ட் நிலத்தை எனக்கு கொடுப்பதாகவும் பஞ்சாயத்து கூட்டி வாய்மொழி மூலமாக பேசி முடிவானது. அவ்வாறு பேசப்பட்டவாறு ஞானசேகரும், எனக்கும் பத்திரம் பண்ணி தரவில்லை. எனது அண்ணன் எனக்கு பத்திரம் பண்ணி தரவில்லை. அந்த கிணற்றை மூடியதில் இருந்து ஆஜர் எதிரிக்கும், எனக்கும் முன்விரோதம் இருந்தது. பேச்சு வார்த்தை இல்லை. கடந்த 14.06.2023ம் தேதி காலை சுமார் 8.30 மணிக்கு கிணறு மூடிய பாகமான எனக்கு சொந்தமான 3சென்ட் நிலத்தில் ஒரு பகுதியில் வரப்பு போட்டு வேலை செய்து கொண்டிருந்தேன்.

அப்போது என் அண்ணன் அங்கு வந்து உன்னை யாருடா என் நிலத்தில் வேலை செய்ய சொன்னது என்று சொல்லி தேவுடியா மகனே, கண்டாரஓலி மகனே, உன்னை இன்னைக்கு கொல்லாமல் விடமாட்டேன், எடுத்தாம்மா கமலா கொடுவாளை உன்னை கொல்லாமல் விடபோறது இல்லை, பார்த்துக்கலாம் என்று சொன்னார். சொன்னவுடன் அவரது மனைவி உடனே கொடுவாளை எடுத்து வந்ததை சுப்ரமணி அவரது கையில் இருந்து புடுங்கி என் கழுத்தை வெட்ட வந்தார். அப்போது நான் ஐயோ என்னை கொன்னுபுடுவானாட்ட இருக்குது என்று சொல்லி இரண்டு கைகளையும் தூக்கி தடுத்தேன். தடுத்த போது எனது இடது கையில் மணிக்கட்டிற்கு கீழே கையின் உள்புறம் கொடுவாளால் வெட்டி விட்டார். அதனால் எனக்கு பலத்த காயம் ஏற்பட்டது. எனது வலது கை நடுப்பகுதியிலும் கொடுவாளால் வெட்டிவிட்டார் (சாட்சி மேற்படி இரண்டு கைகளையும் வெட்டுப்பட்டதை காட்டி சாட்சியம் அளிக்கிறார்). அவர் வெட்டியவுடன் நான் கீழே விழுந்துவிட்டேன். என் மேலே உட்கார்ந்து கொண்டு மீண்டும் என்னை வெட்ட முயற்சித்தார். அப்போது பக்கத்தில் உழவு ஓட்டிக்கொண்டிருந்த மணி என்பவர் அதை பார்த்துவிட்டு ஓடி வந்து கொடுவாளை தூக்கி அருகே எறிந்தார். பின்னர் அதை மீண்டும் ஆஜர் முதல் எதிரி எடுத்து வந்து உன்னை காலி செய்துவிடுவேன் என்றும், இன்னைக்கு உன்னை கொன்றுவிடுவேன் என்று சொல்லி கொடுவாளை காட்டி மிரட்டினார். ஐயோ அம்மா என்று நான் சத்தம் போட்டேன். என் மனைவியும் அந்த இடத்திற்கு வந்து என்னை பார்த்தார். ஆஜர் முதலாம் எதிரி என்னை கொடுவாளை காண்பித்து என்னைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று என்னை மிரட்டி விட்டு கொடுவாளை போட்டுவிட்டு ஓடிவிட்டார். என் மனைவி அதை பார்த்துவிட்டு ஒரு தனியார் ஆம்புலன்சு மூலமாக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மருத்துவமனையில் எனக்கு காயத்திற்கு கட்டுபோட்டு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் நடந்ததை வாக்குமூலமாக சொன்னேன். அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து என்னை மேல் சிகிச்சைக்காக

ஆம்புலன்சு மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சேலம் அரசு மருத்துவமனையில் நான் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மருத்துவமனையில் சேருவதற்காக உட்கார்ந்திருந்தேன். யாரும் என்னை கவனிக்கவில்லை. ரத்த கசிவு அதிகமாக இருந்தது. எனவே தனியார் மருத்துவமனைக்கு போய் சிகிச்சை பெறலாம் என்றும், உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று பயந்து விட்டு கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனைக்கு எனது மனைவி கூட்டிக்கொண்டு சேர்த்தார். எனது கைகளில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை செய்தார்கள்.

(சொத்து அடையாளம் செய்வதற்காக வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2024.12.11 18:44:46 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்